முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹக்கீம் என்ன செய்ய வேண்டும்?

திரு. எம்.ஏ. ஹக்கீம்: அந்த மதுரை இன்றைக்கு மிகப் பெரிய ஏக்கத்திற்கும் வறட்சிக்கும் பசிக்கும் ஆளாகியிருக்கிறது. ஆகையினாலே, சென்னைக்கு அடுத்தபடியாக இன்றைக்கு இந்த நாட்டில் யார், எங்கே, எந்த இடத்தில் கேட்டாலும் மதுரை என்பார்கள். மதுரைக்கு அன்னை மீனாட்சி; அதே மாதிரியாக பிரசித்தி பெற்ற கோயில் இருக்கிற நகரம். அந்த நகரத்தில் வேறு தொழிலே இல்லை; வேறு வாய்ப்பே இல்லை. பசித்துக் கிடக்கிற மதுரைக்கு, சென்னைக்கு அடுத்தபடியாக என்கிறபோது நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அடுத்ததாக முதலிடம் கொடுத்து அந்த டைடல் பார்க்-ஐ துவக்க வேண்டும் என்ற எங்கள் ஆசையைத் தெரிவித்து அதற்குண்டான பணிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை மாத்திரம் மாண்புமிகு அமைச்சர் வாயிலாகத் தெரிந்துகொள்வதற்கு விருப்பம் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, tier 2 சிட்டியில் மதுரை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் கவலைப்பட வேண்டாம். நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்கள் மதுரையிலே டைடல் பார்க் போன்ற ஓர் அமைப்பை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்ற ஒரு நம்பிக்கையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, திருமதி செல்வி முருகேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

5—

தடுப்புச் சுவர்

***21141—திருமதி செல்வி முருகேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003 நவம்பர் 3]

ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியத்திலுள்ள சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் செல்லும் மலைப்பாதையில் தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணியபடி, ஆலயங்களும் கல்விச் சாலைகளும் நன்றாக இருந்தால்தான் ஆட்சி நன்றாக நடக்கும் என்ற அடிப்படையில் ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியத்திலுள்ள சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு 20 இலட்சம் ரூபாய் செலவில் நிதி ஒதுக்கீடு செய்து, பொதுப் பணித் துறை மூலம் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி செல்வி முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுச் சிற்பியின் மறு உருவமாய், முற்போக்குச் சிந்தனையாளராக, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக, எவருக்கும் அஞ்சேன், எதைக் கண்டும் பயப்படேன் என்று சிங்கமெனச் சீறி எழுந்து, கொக்கரிக்கும் குள்ளநரிக் கூட்டங்களின் கொட்டங்களை அடக்கி, அரசியல் வரலாற்றிலே, இந்தியத் துணைக் கண்டத்திற்கே எடுத்துக்காட்டாய், புரட்சிகரத் திட்டங்கள் பல படைத்து, ஆயிரம் ஆயிரம் சாதனைகளை அன்றாடம் நடத்திடும் அற்புதத் தாயே, விண்ணின் மழைத் துளி மண்ணின் உயிர்த்துளி எனப் பெய்யும் மழையின் ஒவ்வொரு சொட்டு மழை நீரையும் வீணாக்காமல் சேமித்து வைப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, குளம் குட்டைகளைத் தூர்வாரச் செய்து செப்பனிட்டு, நாட்டை வளம் மிக்க தமிழ் நாடாக இந்தியாவின் முதன்மை மாநிலமாக முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லக் காத்துக்கொண்டிருக்கும் காவல் தெய்வமே, இமயத்தின் உயரத்தை தன் இரக்கத்தால் வென்றிட்ட இதய தெய்வமே, ஆழ்கடலின் ஆழத்தைத் தளராத ஆற்றலால் வென்றிட்ட வீரத்தின் விளைநிலமே, ஆகாயத்தின் பரப்பினை அயராப் பணியினால் வென்றிட்ட புவிபோற்றும் புரட்சி பூபாளமே, தாங்கள் இருக்கும் திசை நோக்கி திருவடிகளைப் பணிந்து வணங்கி நன்றியைக் காணிக்கையாக்கிக் கொண்டு ஒருகால பூசைக்கே வழி இல்லாமல் இருந்த ஆலயங்களுக்கு

ஒரு கால பூசை முறையைக் கொணர்ந்து ஆலயங்களில் திருப்பணிகளை மேற்கொள்ளச் செய்து கும்பாபிஷேகங்களை நடத்தி, ஆலயங்களில் இருக்கும் குளங்களையெல்லாம் தூர்வாரச் செய்து, செப்பனிட்டு திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி பக்தர்களின் பசியைப் போக்கிய காவல் தெய்வமே, என்னுடைய காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியத்திலுள்ள சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் செல்லும் மலைப் பாதைக்குத் தடுப்புச் சுவர் கட்டுவது பொதுப் பணித் துறையின் மூலமாக எடுக்கப்பட்டு தற்போது பணி சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது. ஆனால், அந்தத் தடுப்புச் சுவர் மலைக் கோயிலின் அடிவாரம் வரை கட்ட வேண்டும். பாதை மிகவும் குறுகலாக இருப்பதால் மலைக் கோயிலுக்கு வரும் பேருந்து, வேன், கார் மற்றும் இரு சக்கர வாகனங்கள் ஒன்றையொன்று முன்னேறிச் செல்லும் பகுதி பாதுகாப்பற்றதாக இருக்கிறது. அதனால் மலைக் கோயில் அடிவாரம் வரை தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைக் கோயிலுக்குச் செல்லும் பாதை வனத் துறையினுடைய பொறுப்பிலே இருக்கிற காரணத்தினாலே அகலப்படுத்துவதற்கு வனத் துறையினுடைய அனுமதியைப் பெற்று கீழேயிருந்து மேலே செல்லக்கூடிய அளவிற்கு பணிகளைத் துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி செல்வி முருகேசன்: அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

6—

நூல் நிலையம்

***22548—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—